©
தமிழ்நாடு அரசு
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு

தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 38] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 23, 2026
புரட்டாசி 6, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057

பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.

அறிவிக்கைகள்

[அரசாணை (நிலை) எண். 127, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4(2)]த் துறை, 25 ஜூன் 2026.]

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், வேதாரண்யம் இரண்டாம் நிலை நகராட்சியை உள்ளடக்கிய பகுதியை, வேதாரண்யம் உள்ளூர் திட்டமிடல் பகுதி என அறிவித்திருந்ததை, 13.01.2016 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்***, பாகம் II—பிரிவு 2–இல், 11 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/HOU/22/2016 ஆம் எண் அறிவிக்கையாக வெளியிட்டிருப்பதாலும்,

மேலும், மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், வேதாரண்யம் உள்ளூர் திட்டமிடல் பகுதியிலுள்ள 48. கடினல்வயல், 49. ஆதனூர் 51. நெய்விளக்கு 52. தேத்தாக்குடி தெற்கு மற்றும் 53. பெரியகுத்தகை ஆகிய வருவாய் கிராமங்களை சேர்ப்பதற்கான அவரது நோக்கத்தை அறிவித்திருந்ததை, 26.06.2024 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–இல், 317–ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/HOU/518/2024 ஆம் எண் அறிவிக்கையாக வெளியிடப்பட்டு, இது தொடர்பாகப் பெறப்பட்ட அனைத்து மறுப்புரைகளும் அல்லது கருத்துகளும் கருதிப்பார்க்கப்பட்டிருப்பதாலும்:

எனவே, தற்போது, 13.01.2016 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்***, பாகம் II—பிரிவு 2–இல், 11–ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/HOU/22/2016–ஆம் எண் அறிவிக்கையை பகுதியளவு மாற்றியமைத்தும், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், வேதாரண்யம் உள்ளூர் திட்டமிடல் பகுதியில், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் அடங்கும் என இதனால் அறிவிக்கிறார்:

அட்டவணை

தொ.எண்.(1)	பகுதிகள் (2)
1.	வேதாரண்யம் இரண்டாம் நிலை நகராட்சி.
2.	வேதாரண்யம் தாலுகாவில் உள்ள பின்வரும் வருவாய் கிராமங்கள்: 48. கடினல்வயல் 49. ஆதனூர் 51. நெய்விளக்கு 52. தேத்தாக்குடி தெற்கு 53. பெரியகுத்தகை

[அரசாணை (நிலை) எண். 152, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4(2)]த் துறை, 10 ஆகஸ்ட் 2026.]

1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், வேலூர் உள்ளூர் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களை சேர்ப்பதுடன், 02.09.1981–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–இல், 563–ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)HOU/3679/81–ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். அவ்வாறு செய்வதற்கான நோக்கம் மேற்சொன்ன சட்டத்தின் 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் கோரப்பட்டுள்ளவாறாக, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், அட்டவணையில், நெடும்பத்தி (2) இல் "21. வேலூர்" என்ற பதிவிற்குப் பின்னர், பின்வரும் பதிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

"34. வீரணம்பாளையம்
பரமத்தி பேரூராட்சி

33. பரமத்தி
பொத்தனூர் பேரூராட்சி

47. பொத்தனூர்

46. தேவராயசமுத்திரம்"

[அரசாணை (நிலை) எண். 153, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4(2)]த் துறை, 10 ஆகஸ்ட் 2026.]

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், சத்தியமங்கலம் உள்ளூர் திட்டமிடல் பகுதியில், பின்வரும் வருவாய் கிராமங்களை சேர்ப்பதுடன், 10.04.1974–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு –2–இல் 207ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/2009/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் மேற்கொள்கிறார். அவ்வாறு செய்வதற்கான நோக்கம், மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் கோரியுள்ளவாறாக ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், அட்டவணையில் நெடும்பத்தி (3) இல் "26, இரங்கசமுத்திரம்" என்ற பதிவிற்குப் பின்னர் பின்வரும் பதிவுகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

57. அரியப்பம்பாளையம்	அரியப்பம்பாளையம் பேரூராட்சி
55. புதுக்கலையனூர்	
56. பழையக்கலையனூர்	
35. பட்டவர்த்தி அய்யம்பாளையம்	
32. சிக்கரசம்பாளையம்	
26. தாசரிபாளையம்	
28. மலையடிப்புதூர்	
59. கொமராபாளையம்	
33. இக்கரைநெகமம்	
52. அக்கரைநெகமம்	
53. கோணமூலை	
60. ஆலத்துக்கோம்பை	
61. சதுமுகை	
62. மாக்கினாங்கோம்பை	
64. அரசூர்	
63. இண்டியம்பாளையம்	
54. செண்பகபுதூர்	
65. உக்கரம்	

[அரசாணை (நிலை) எண். 154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4(2)]த் துறை, 10 ஆகஸ்ட் 2026.]

1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கொமாரபாளையம் உள்ளூர் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களை இதனால் சேர்ப்பதுடன், 14.07.1982 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–இல், 456 – 457 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அறிவிக்கை எண். II(2)/HOU/3256/82. ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். மேற்சொன்ன சட்டத்தின் 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் கோரப்பட்டுள்ளவாறு, அவ்வாறு செய்வதற்கான நோக்கம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், அட்டவணையில், நெடும் பத்தி (2)–இல், "46. கொமாரபாளையம் அமணி (பகுதி)" என்ற பதிவிற்குப் பின்னர், பின்வரும் பதிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

"02. கொமாரபாளையம் அக்ரஹாரம் (பகுதி).

03. கொமாரபாளையம் (பகுதி)."

[அரசாணை (நிலை) எண். 155, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4(2)]த் துறை, 10 ஆகஸ்ட் 2026.]

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 17.04.1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 –இல் 223 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/2168/74ஆம் எண் அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளவாறாக புளியங்குடி உள்ளூர் திட்டமிடல் பகுதியுடன் பின்வரும் வருவாய் கிராமங்களைச் சேர்ப்பதற்கான அவரது நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்.

"வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்

கடையநல்லூர் வட்டம்

14. சொக்கம்பட்டி.

11. மடத்துப்பட்டி.".

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள், மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எழுத்து பூர்வமாக அரசிடம் அளிக்கலாம் என்றும் மேற்சொன்ன கால அளவிற்குள் பெறப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க, மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை எழுத்துப்பூர்வமாக அரசு முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

[அரசாணை (நிலை) எண். 156, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ–1]த் துறை, 10 ஆகஸ்ட் 2026.]

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (c) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 22.02.2023 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2 இன் 146 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/வீ.வ/148/2023 ஆம் எண் அறிவிக்கையை இதனால் இரத்து செய்கிறார்.

ஆர். கிர்லோஷ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

(தமிழாக்கம்)

ந. அருள்,
இயக்குநர் (பொ),
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.